வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 07.11.2024 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று கோவாவில், இந்தியக் கடற்படையின் செயல்பாட்டுத் திறன்களை வெளிப்படுத்தும் வகையிலான, கடலில் ஒருநாள் நிகழ்வில் கலந்து கொண்டார்.

ஒரே பதவி - ஒரே பென்ஷன் திட்டத்தினால், கடந்த 10 ஆண்டுகளில், லட்சக் கணக்கிலான முன்னாள் ராணுவத்தினர் பயன் பெற்றுள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தேசிய தீவிரவாத எதிர்ப்பு கொள்கை, மற்றும், உத்திகளை, விரைவிலேயே அரசு அறிவிக்கும் என்று, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் துறையினர், நாட்டின் மொத்த ஏற்றுமதியில், 40 சதவிகிதப் பங்களிப்பதாக, நிதி ஆயோக் தலைமை செயல் அதிகாரி திரு. BVR சுப்ரமணியம் தெரிவித்துள்ளார்.

---

*முர்மு* (9)

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று கோவாவில், இந்தியக் கடற்படையின் பன்முக செயல்பாட்டுத் திறன்களை

வெளிப்படுத்தும் வகையிலான, கடலில் ஒருநாள் நிகழ்வில் கலந்து கொண்டார். முற்றிலும் உள்நாட்டிலேயே கட்டப்பட்ட ஐஎன்எஸ் விக்ராந்த் போர்க் கப்பலில் இருந்து, விமானங்களை இயக்கும் செயல்பாடுகளையும், நீர்மூழ்கிக் கப்பல் பயிற்சிகளையும் அவர் பார்வையிட்டார். முன்னதாக, கோவாவின் டாபோலிம் பகுதியில் உள்ள ஐஎன்எஸ் ஹன்சா கடற்படை தளத்தில், கடற்படையினர் வழங்கிய அணிவகுப்பு மரியாதைகளையும் குடியரசுத் தலைவர் ஏற்றுக் கொண்டார்.

---------------------

*மோடி-ராணுவம்* (17)

பாதுகாப்புப் படையினருக்கான ஒரே பதவி - ஒரே பென்ஷன் திட்டத்தினால், கடந்த 10 ஆண்டுகளில், லட்சக் கணக்கிலான முன்னாள் ராணுவத்தினர், மற்றும் அவர்தம் குடும்பங்கள் பயன் பெற்றுள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். பாதுகாப்புப் படையினரின் நீண்டகால கோரிக்கைகளை நிறைவேற்றி உள்ள இத்திட்டம், பாதுகாப்புப் படையினர் மீது, நாட்டிற்கு உள்ள நன்றிக் கடனையும், பாதுகாப்பு படையினரின் நலனில், அரசுக்கு உள்ள உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்தி இருப்பதாக, திட்டத்தின் 10ஆம் ஆண்டு நிறைவை ஒட்டி, இன்று சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில் பிரதமர் கூறியுள்ளார். பாதுகாப்புப் படையினரின் நலன்களை இன்னும் மேம்படுத்தவும், பாதுகாப்புப் படைகளை தொடர்ந்து வலுப்படுத்தவும், இயன்ற எல்லா நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளும் என்று அவர் மேலும் உறுதி

அளித்துள்ளார். ஒரே பதவி-ஒரே பென்ஷன் திட்டத்தினால், பாதுகாப்புப் படைகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற சுமார் 25 லட்சம் பேர், மற்றும், அவர்தம் குடும்பத்தினர் பயன்பெற்று வருவதாக, பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. நடப்பு நிதியாண்டில், இத்திட்டத்தினால் அரசுக்கு, 4 ஆயிரத்து 468 கோடி ரூபாய் செலவாகும் என்றும், தெரிவிக்கப் பட்டுள்ளது.

---------------------

*சத்-மோடி* (8)

சூரிய பகவானை வழிபடுவதற்கான சத் பூஜையின் 3ஆம் நாளான இன்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். 3ஆம் திருநாளான சத் சந்தியா அர்க்ய பூஜை, எளிமை, கட்டுப்பாடு, அர்ப்பணிப்பு உணர்வு, மற்றும், மன உறுதியின் சின்னமாகவே திகழ்வதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் கூறியுள்ளார். மகத்தான இத்திருநாள், அனைவரின் வாழ்விலும், மகிழ்ச்சி, வளம், மற்றும், நல்ல அதிர்ஷ்டத்தை கொண்டு வந்து சேர்க்கட்டும் என்றும் பிரதமர் வாழ்த்தி உள்ளார்.

---------------------

*சிறப்பு ரயில்* (14)

நடப்பு பண்டிகைக் காலத்தில், பயணிகள் நெரிசலை சமாளிக்க ரயில்வேத் துறை சிறப்பு ரயில்களை இயக்கி வருகிறது. பண்டிகைக் கொண்டாட்டங்களுக்கு பின்னர், சொந்த ஊரில் இருந்து திரும்பும்

பயணிகளின் வசதிக்காக, நாளை முதல் 164 சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளன. வரவிருக்கும் 3 நாட்களில், மொத்தம் 476 ரயில்களை இயக்கத் திட்டமிடப் பட்டுள்ளதாக, ரயில்வே வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. வடக்கு ரயில்வே நிர்வாகம், டெல்லி, ஹரியானா, பஞ்சாப், உத்தரபிரதேஷ், உத்தராகண்ட், மற்றும், ஜம்மு-காஷ்மீரில் இருந்து, நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு சுமார் 20 ரயில்களை இயக்க உள்ளது. வாரணாசி, ப்ரயாக்ராஜ், தர்பங்கா, கோரக்பூர், பரானி, ஹவுரா உள்ளிட்ட இடங்கள் இதில் அடங்கும். ரயில்கள் வந்து சேர்ந்தவுடன், ரயில் நிலையத்தில் இருந்து பயணிகள் சுமூகமான முறையில் வெளியேற, ரயில்வே பாதுகாப்புப் படையினர், மற்றும், தன்னார்வலர்கள், பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளதாகவும் ரயில்வே வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

---------------------

*புவனேஷ்வர்-மெட்ரோ (9)*

ஒடிசாவில், புவனேஷ்வர் மெட்ரோ ரயில் திட்டத்தின் முதல்கட்ட பணிகள், 2027ஆம் ஆண்டு டிசம்பரில் பூர்த்தியாகும் என்று, மெட்ரோ ரயில் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். முற்றிலும் மாநில அரசின் நிதி மூலம் சுமார் 6 ஆயிரத்து 256 கோடி ரூபாய் செலவு மதிப்பீட்டில், இத்திட்டம் மேற்கொள்ளப் படுகிறது. இத்திட்டத்தின் கீழ், புவனேஷ்வரில், 26 கிலோ மீட்டர் நீளத்திற்கு மெட்ரோ ரயில் பாதை அமைக்கப்படும் என்றும், திட்டத்தின் முதல்கட்டத்தில், புவனேஷ்வரில் உள்ள பிஜூ பட்நாயக் சர்வதேச விமான நிலையம், கட்டக்கில் உள்ள திரிசூலியா சதுக்கத்துடன்

மெட்ரோ ரயில் பாதை மூலம் இணைக்கப்படும் என்றும், அறிவிக்கப் பட்டுள்ளது.

---------------------

*ஜெய்சங்கர்* (13)

உள்கட்டமைப்பு, உற்பத்தி, திறன் மேம்பாடு, டிஜிட்டல் உள்ளிட்ட துறைகளில், இந்தியாவில் ஏற்பட்டு வரும் புரட்சிகரமான மாற்றங்களை வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று, ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில், முன்னணி ஆஸ்திரேலிய நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரிகளுடன் நடத்திய கூட்டத்தில் எடுத்துக் கூறினார். வலுவான, வர்த்தக, மற்றும் முதலீட்டு தொடர்புகள்தான், விரிவான இருதரப்பு உறவுகளின் உந்து சக்தியாக திகழ முடியும் என்றும் அவர் கூறினார். வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், தமது ஆஸ்திரேலிய பயணத்தின் போது, அங்குள்ள இந்திய சமூகத்தினரையும், ஆஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்தார். இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதில், ஆஸ்திரேலியாவில் உள்ள இந்திய சமூகத்தினர் ஆற்றி வரும் முக்கிய பங்களிப்புகளுக்கு அவர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

---------------------

*கனடா* (6)

கனடாவின் பிராம்டன் நகரில், இந்து கோவிலுக்கு வெளியே நடந்த தூதரக முகாமில், வன்முறை மோதல் ஏற்பட்டதை தொடர்ந்து,

டொரான்டோ நகரில் உள்ள இந்திய தூதரகம், ஏற்கனவே திட்டமிட்டிருந்த இத்தகைய பல்வேறு முகாம்களை, ரத்து செய்துள்ளது. இம்முகாம்களுக்கு குறைந்தபட்ச பாதுகாப்பு அளிக்க, கனேடிய அதிகாரிகள் தவறிவிட்டதை தொடர்ந்து, இவ்வாறு முடிவு செய்யப் பட்டுள்ளதாக, தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

---------------------

*அமித் ஷா* 1 (17)

தீவிரவாதத்தையும், தீவிரவாதிகளுக்கான ஆதரவு சூழலையும், எதிர்க்கும் வகையில், அரசு விரைவிலேயே தேசிய தீவிரவாத எதிர்ப்பு கொள்கை, மற்றும், உத்திகளை அறிவிக்கும் என்று, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார். தேசிய புலனாய்வு ஏஜென்சி சார்பில் புதுடெல்லியில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள 2 நாள் தீவிரவாத எதிர்ப்பு மாநாட்டை இன்று அவர் தொடக்கி வைத்து பேசினார். பிரதமர் திரு. நரேந்திர மோடி பதவியேற்றது முதல், அரசு கடந்த 10 ஆண்டு காலத்தில், தீவிரவாதத்திற்கு எதிரான கடுமையான அணுகுமுறை ஒன்றை கடைபிடித்து வருவதாகவும், தீவிரவாதத்தை கொஞ்சம் கூட சகித்துக் கொள்ள கூடாது என்பதான பிரதமர் திரு. நரேந்திர மோடியின் அழைப்பை உலகமே பாராட்டுவதாகவும் அவர் தெரிவித்தார். தீவிரவாதத்தை எதிர்த்து போராட, நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில், வலுவான சூழல் உருவாக்கப் பட்டுள்ளதாக உள்துறை அமைச்சர் கூறினார். 2014 முதல், 2021ஆம் ஆண்டு வரையிலான கால கட்டத்தில், தீவிரவாத சம்பவங்களின்

எண்ணிக்கை, அதற்கு முந்தைய 7 ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், 70 சதவிகிதம் குறைந்து இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். தீவிரவாத தாக்குதல்களும், தீவிரவாதிகளின் சதித் திட்டங்களும், முற்றிலும் நாட்டிற்கு

*அமித் ஷா* 2 (7)

எதிரானவை என்று, திரு. அமித் ஷா கூறினார். அண்மைக் காலங்களில், நாட்டின் பாதுகாப்பு தொடர்பான பல்வேறு சட்டங்கள், நடப்பு தேவைகளுக்கு ஏற்ப திருத்தப்பட்டு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். நாடு சுதந்திரம் பெற்றது முதல், நாட்டின் எல்லைகளை பாதுகாக்கும் பணியிலும், உள்நாட்டு பாதுகாப்பை பராமரிக்கும் பணியிலும் உயிர் தியாகம் செய்த காவல் துறையினர் 36 ஆயிரத்து 468 பேருக்கு, மத்திய உள்துறை அமைச்சர் தமது உரையில், புகழஞ்சலி செலுத்தினார்.

---------------------

*நிதி ஆயோக்* 1 (17)

சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் துறையினர், நாட்டின் மொத்த ஏற்றுமதியில், சுமார் 40 சதவிகிதம் பங்களிப்பதாக, நிதி ஆயோக் தலைமை செயல் அதிகாரி திரு. BVR சுப்ரமணியம் கூறியுள்ளார். இதை மேலும் அதிகரிக்கும் வகையில், சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் துறையினரின் மூலதனத் தேவைகள், தொழில்நுட்ப மேம்பாடு, மற்றும், ஒழுங்குமுறை விதிகளுக்கு அரசு மிகுந்த முக்கியத்துவம் அளிப்பதாக, அவர் இன்று புதுடெல்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் கூறினார். குறிப்பாக, மின்னணு, மற்றும், மோட்டார் வாகன உதிரி பாகங்கள் உற்பத்தித்

துறையில், சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு உகந்த சூழல் ஒன்றை உருவாக்க நிதி ஆயோக் முயன்று வருவதாக அவர் தெரிவித்தார். உள்கட்டமைப்புத் துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் முதலீடுகள், மற்றும், அரசின் மூலதன செலவுகளால், பொருளாதாரச் சூழலில் முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டு உள்ளதாகவும், நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக இம்மாற்றங்கள் அமைந்து இருப்பதாகவும் திரு. சுப்ரமணியம் கூறினார். வேலை பார்க்கும் வயதில் உள்ள இளைஞர்களின் எண்ணிக்கை, உலகிலேயே இந்தியாவில்தான் மிக அதிகம் என்றும், இந்தியாவின் மக்கள் தொகை, வரவிருக்கும்

*நிதி ஆயோக்* 2 (4)

ஆண்டுகளில், வளர்ச்சியின் தூண்டுகோலாக திகழும் என்றும் அவர் குறிப்பிட்டார். வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில், இதுதொடர்பான நடைமுறைகள், மற்றும் ஒழுங்குமுறை விதிகளை எளிமையாக்குதல் அவசியம் என்றும், அவர் வலியுறுத்தினார்.

---------------------

*நியமன விதிகள் (10)*

அரசுப் பணிகளுக்கான ஆள் சேர்ப்பு விதிமுறைகளை, முறையான அறிவுறுத்தல் இன்றி, பாதியிலேயே மாற்ற முடியாது என்று, உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. ஆள் சேர்ப்பு விதிமுறைகள், அரசியல் சாசனத்தின் 14ஆவது பிரிவிற்கு ஏற்ப அமைய வேண்டியதும் அவசியம் என்று, தலைமை நீதிபதி திரு. சந்திரசூட் தலைமையிலான, 5 நீதிபதிகள் அடங்கிய அமர்வு இன்று தனது உத்தரவில் கூறியது. அரசுப்

பணிகளுக்கான ஆள் சேர்ப்பு நடைமுறைகளில், பாகுபாடின்மை மற்றும், வெளிப்படைத் தன்மை இருக்க வேண்டும் என்றும், போட்டியாளர்களை பாதிக்கும் வகையில் விதிமுறைகளை, பாதியிலேயே மாற்றக் கூடாது என்றும், நீதிபதிகள் ஏகமனதாக தெரிவித்தனர்.

---------------------

*பிரச்சாரம் (18)*

வரும் 13ஆம் தேதி, முதல்கட்ட சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ள ஜார்கண்டில், அனைத்து அரசியல் கட்சிகளும் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளன. மூத்த பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திருமதி அன்னபூர்ணா தேவி, இன்று ஹசாரிபாக்கில், தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில், ஜார்கண்டில் உள்ள ஹேமந்த் சோரேன் அரசின் தவறான நிர்வாகத்தினால், மாநில மக்கள் அதிருப்தி அடைந்து இருப்பதாக கூறினார். மூத்த ஜேஎம்எம் தலைவர் திருமதி கல்பனா சோரேன், குந்தி பகுதியில், பிரச்சார பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில், ஹேமந்த் சோரேன் அரசின் பதவிக் காலத்தில், மாநிலத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் அமலாகி இருப்பதாகக் கூறினார். காங்கிரஸ், ராஷ்ட்ரீய ஜனதா தளம், மற்றும், இடதுசாரி கட்சிகளின் முக்கிய தலைவர்களும், ஜார்கண்ட் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில், தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர். 81 உறுப்பினர் ஜார்கண்ட் சட்டப் பேரவைக்கு, வரும் 13ஆம் தேதி முதல் கட்டமாகவும், 20ஆம் தேதி, 2ஆவது, மற்றும், இறுதி கட்டமாகவும் தேர்தல் நடைபெற உள்ளது. வரும் 20ஆம் தேதி, மகாராஷ்ட்ர மாநிலத்தின் அனைத்து 288 தொகுதிகளுக்கும்,

ஒரே கட்டமாக சட்டமன்றத் தேர்தல் நடைபெற இருப்பதை ஒட்டி, அம்மாநிலத்திலும் அரசியல் கட்சிகள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றன.

---------------------

*ஸ்மிரிதி இராணி* (14)

370ஆவது அரசியல் சாசனப் பிரிவு நீக்கப்பட்ட பின்னர், ஜம்மு-காஷ்மீரில் தீவிரவாத சம்பவங்கள் 70 சதவிகித அளவிற்கும், சிவிலியன் மரணங்கள், 80 சதவிகித அளவிற்கும் குறைந்து இருப்பதாக, மூத்த பிஜேபி தலைவர் திருமதி ஸ்மிரிதி இராணி கூறியுள்ளார். ஜம்மு-காஷ்மீருக்கு, சிறப்பு அந்தஸ்து, மற்றும், அரசியல் சாசன உத்தரவாதங்களை மீண்டும் வழங்கக் கோரி, ஜம்மு-காஷ்மீர் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இருப்பதை சுட்டிக் காட்டி, இன்று புதுடெல்லியில், செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். இண்டியா கூட்டணி தலைவர்கள், ஜம்மு-காஷ்மீரில், அரசியல் சாசனத்திற்கு எதிராக புதிய போர் ஒன்றை நடத்தி வருவதாக அவர் குற்றம் சாட்டினார். ஜம்மு-காஷ்மீரில், பழங்குடிகள், தாழ்த்தப்பட்ட பிரிவினர், மற்றும் பெண்களின் உரிமைகளை மீறியதன் மூலம், அரசியல் சாசனத்தை குழி தோண்டிப் புதைத்தவர்களே, இண்டியா கூட்டணி தலைவர்கள்தான் என்றும், ஜம்மு-காஷ்மீரில், காங்கிரஸ், தீவிரவாதத்திற்கு எதிராக நிற்கவில்லை என்றும், அவர் குறிப்பிட்டார்.

---------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று கோவாவில், இந்தியக் கடற்படையின் செயல்பாட்டுத் திறன்களை வெளிப்படுத்தும் வகையிலான, கடலில் ஒருநாள் நிகழ்வில் கலந்து கொண்டார்.

ஒரே பதவி - ஒரே பென்ஷன் திட்டத்தினால், கடந்த 10 ஆண்டுகளில், லட்சக் கணக்கிலான முன்னாள் ராணுவத்தினர் பயன் பெற்றுள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தேசிய தீவிரவாத எதிர்ப்பு கொள்கை, மற்றும், உத்திகளை, விரைவிலேயே அரசு அறிவிக்கும் என்று, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் துறையினர், நாட்டின் மொத்த ஏற்றுமதியில், 40 சதவிகிதப் பங்களிப்பதாக, நிதி ஆயோக் தலைமை செயல் அதிகாரி திரு. BVR சுப்ரமணியம் தெரிவித்துள்ளார்.

---------------------